بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா**

**11 May 2018 (24 Shabaan 1439 A H)**

# “ISLAM & RAMADAN”

## “இஸ்லாம் மற்றும் ரமலான்”



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

எல்லா புகழும் வானங்களையும் பூமியையும் படைத்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்குரியது. அல்லாஹ்வின் கருணையால் நாம் ஒருமுறைக் கூட அருள் நிறைந்த ரமலான் மாதத்தை வரவேற்றுக்

கொள்ள தயாராகயிருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ். மே 16 அல்லது 17 – க்கு ரமலான் ஆரம்பித்துவிடும்.

நம்பிக்கை கொண்டோர்களே! ரமலான் மாதம் ஒரு புனித மாதமாகும். இ∴து இறைவன் தனது படைப்பினங்களை நிரந்தரமாக சோதனைகளுக்குள்ளாக்கி, நித்தியமான மகிழ்ச்சியை பெறுவதற்கான வாய்ப்பினை மானிடக்குலத்திற்கு அளிக்கும் மாதமாகும். நோன்பு நோற்பு என்பது ஒரு முழுமையான சுத்திகரிப்பு ஆகும். இது இறைவனை பற்றிய விழிப்புணர்வினையும் அவ்விறைவனின் இருப்பைப் பற்றிய அங்கீகரிப்பினையும் வளர்ப்பதற்கான வழிமுறையாகும். அதோடு இறைவல்லமை எல்லா இடங்களிலும் நிரம்பி வழிகிறது என்பதனை கண்டுக் கொள்வதற்கான வழியுமாகும். ஒரு நபாரால் நேன்பு நோற்பதன் மூலம் அதிகமான இறையச்சத்தினை பெற முடிகிறது. சாத்தானின் அனைத்து திட்டங்களுக்கும் மற்றும் இவ்வுலக துன்பங்களுக்கும் எதிராக இறையச்சம் என்பது ஒரு பாதுகாப்பை அளிக்கின்றது.

**“அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒருவழியை ஏற்படுத்துவான். அவர்கள் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். அல்லாஹ்விடம் நம்பிக்கை வைப்பவருக்கு அவனே போதுமானவன். நிச்சயமாக அல்லாஹ் தனது நோக்கத்தை நிறைவேற்றுவான். அல்லாஹ் ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவை நியமித்துள்ளான்”. (65:3-4)**

நோன்பு நோற்பு மற்றும் நோன்பு நோற்பு நடவடிக்கைகளைக் குறித்து இன்று பல முஸ்லீம்களும் தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். நோன்பு நோற்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களின் அனுதின செயல்களை மாற்றி வைத்து தூங்கி கொள்வதற்கு விரும்புகின்றனர். தங்களை படைத்தவனுக்கு அஞ்சியவர்களாக இருந்து அப்படைத்தவனுக்காக நோன்பு நோற்கவும் செய்கின்ற முஸ்லீம்கள் நிச்சயமாக திருக் குர் - ஆனைப் படிப்பதற்காகவும் ஒவ்வொரு நேரமும் முறைப்படியான தொழுகையை கடைப்பிடிப்பதற்க்காகவும் விழித்திருப்பார்கள். ஆனால் சிலர் தொழுகைக்காக மட்டும் எழும்பியப்பின் மீண்டும் தூங்கிக் கொள்கின்றனர். இந்த இரண்டாவது தூக்கம் அவர்களை சோம்பேறியாக மாற்றிக்கொள்கிறது. தங்களை

சுத்திகரித்துக் கொள்வதற்கான நல்ல வாய்ப்பினை அவர்கள் இழக்கின்றனர். ஆன்மீக காரியங்களில் மூழ்கி இந்த அருள் நிறைந்த மாதத்தை முழுமையாக அனுபவித்துக் கொள்வதற்கு கிடைக்கும் வாய்ப்பு என்பது உண்மையில் இறைவன் நமக்கு வகுத்து வைத்துள்ள அருள் கொடையாகும். ஆகவே அதை நீங்கள் இழக்காதீர்கள்.

நம்பிக்கையாளர்களைப் பொறுத்த வரையில் ரமலான் என்பது தீவிரமாக செயல்படுவதற்கான மாதமாகும். உணவு சம்பந்தமான காரியங்களிலிருந்து முழுமையாக விடுதலைப் பெற்றிருப்பதால் அல்லாஹ்வின் பாதையில் இன்னும் அதிகமான முயற்சியை மேற்கொள்வதற்கும், இறைத்தியானத்தில் மூழ்குவதற்கும், மற்றும் திருக் குர் - ஆன் அதிகநேரம் வாசிப்பதற்கும், நோன்பு நோற்பவருக்கு முடிகின்றது. அத்துடன் தனது உணர்ச்சி (நப்ஸ்) மற்றும் அகங்காரம் ஆகியவற்றை கட்டுப்படுத்தி ஒரு புத்திசாலியாக மாறிடுவதற்கும், தாழ்மையுடன் நடந்துக்கொள்வதற்கும் நோன்பு நோற்பு வழிவகுக்கின்றது. பிற மக்களை குறித்து ஒற்று நோக்காமலிருங்கள். ஏனையவர்கள் மீது வதந்திகளைப் பரப்பாமலிருங்கள். எல்லாவிதமான விவாதங்களிலிருந்தும் விலகி நில்லுங்கள். வீண்பேச்சுகள், சண்டைகள், வெறுப்பு, பொறாமை மற்றும் சந்தேகம் போன்றவையை தவிர்த்துக் கொள்ளுங்கள். நற்செயல்களை செய்வதன் மீது அதிக கவனம் செலுத்துங்கள். உங்களின் பாவங்களை மன்னிப்பதற்கு இறைவனிடம் மன்றாடுங்கள். எல்லாம் வல்ல இறைவன் உங்களின் பாவங்களை மன்னிப்பானாக. உங்களின் நோன்பு மற்றும் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வானாக.

இஸ்லாமிய வரலாற்றில் ரமலானுக்கு மிக முக்கியத்துவம் உள்ளது. ஹிஜ்ராவுக்கு பிறகு ஒன்பது வருடகாலம் நமது அன்புக்குரிய நபி அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் ரமலான் மாதத்திற்கு சாட்சியாக வாழ்ந்திருந்தார். அவ்வருடங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள், அல்லாஹ்விடமான கட்டுப்படுதல்கள் மற்றும் தியாகங்கள் போன்றவை தெளிவாக காணலாம். (இந்த ரமலானின் வரலாறைப்பற்றி ஆராய்ந்துக் கொண்டால்) ஹிஜ்ரா முதல் ஆண்டில் ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலீப் (ரலி) அவர்களின் தலைமையில் முப்பது முஸ்லீம்கள் உட்பட்ட ஒரு குதிரை படை ராணுவத்தை,

சைப்அல்பஹ்ப்ரி என்ற பகுதியை நோக்கி திரு நபி (ஸல்) அவாகள் அனுப்பி வைத்தார். இது 300 நபர்கள் உட்படுகின்ற குறைஷி இராணுவத்தை தடுத்து நிறுத்துவதற்காகயிருந்தது. முஸ்லீம்கள் போருக்கு தயாராக இருந்தார்கள். ஆனால் முஸ்லீம்களிடமும் மற்றும் குறைஷிகளிடமும் நல்ல உறவை வைத்திருந்த மஜீத் இப்னு அம்ரல் ஜீஹானி அவர்கள் இப்பிரச்சனையில் ஈடுபட்டு இரண்டு கட்சிகளுக்கு இடையில் மத்தியஸ்தராகயிருந்து போரை தடுத்து நிறுத்தினார். முஸ்லீம்களின் ஒற்றுமையை உடைக்க மதீனாவை சார்ந்த நயவஞ்சகர்கள் கண்டு கொண்ட ஒரு வழியே தங்களுக்காக மசூதியை (AL – Dirar) கட்டுதல். இந்த மசூதியை தகர்த்துக்கொள்ள திரு நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு கட்டளை விடுத்ததும் ஒரு ரமலான் மாதத்திலாகும்.

உண்மை மற்றும் பொய்மையினை பகுத்தறிவதற்கு வழிவகுத்த பதர்போர் நடைபெற்ற நாளானது ஹிஜ்ரா மூன்றாம் வருடம் ரமலான் மாதம் 17 – ம் தேதியாகும். இஸ்லாமை அழித்திட வேண்டும் என்ற இலக்குடன் அவநம்பிக்கையாளர்களாகிய குறைஷி இராணுவம் எல்லா விதத்திலும் தயாராக முன் வந்தனர். 313 முஸ்லீம்கள் மட்டுமே இருந்தனர். இராணுவபலத்திலும், எண்ணிக்கையிலும், போர் உபகரணங்களின் எண்ணிக்கையிலும் பெரிய அளவிற்கு வித்தியாசம் இருந்த போதிலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்தான் வெற்றி பெற்றார். தங்களின் நம்பிக்கையை பாதுகாத்து கொள்ள முஸ்லீம்கள் உறுதியான முடிவெடுத்தனர். நபி (ஸல்) அவர்களின் பாதுகாப்பை மிக முக்கியத்துவத்துடன் அவர்கள் கண்டு கொண்டனர். தங்களின் வீரமரணம் வாயிலாக தங்களைப் படைத்த அல்லாஹ்வை அடைய அவர்கள் ஆயத்தமாயினர். அல்லாஹ் அவர்களுக்கு உறுதியான ஒரு வெற்றியினை ரமலான் மாதத்தில் அளித்தான். இஸ்லாமிய வரலாற்றில் எவருக்கு மறக்கமுடியாத ஒன்றாக இருக்கின்றது பதர்போரின் வெற்றி.

ஹிஜ்ர 6 – ம் வருடம் முஸ்லீம்களின் வர்த்தக சங்கங்களை ஆக்கிரமித்து அவர்களின் செல்வங்களை கொள்ளை கொண்ட பாத்திமா பிந்து ராபியா என்ற ஒரு பெண்ணின் கட்டுபாட்டுக்குள் இருந்த வாதிஅல்குர என்ற பகுதியை நோக்கி சைத் இப்னு ஹாரிஸ் அவர்களின்

தலைமையில் ஒரு இராணுவபடை அனுப்பப்பட்டது. இஸ்லாமின் மீதான பகை காரணமாக வசைப்பெயரை பெற்றவளாகயிருந்தார் அப்பெண். ரமலான் மாதத்தில் நடைபெற்ற அந்த போரில் முஸ்லீம்கள் அப்பெண்ணை கொன்றனர். ஹிஜ்ரா 8 – ம் வருடத்தில் ரமலானின் முடிவில் அரேபியாவின் வடக்கு பேர்ஷியன் கோட்டைக்கு எதிராக முஸ்லீம்கள் படைப்பிரச்சாரம் மேற்கொண்ட வேளையில்தான், குதைபியா உடன்படிக்கையை எதிராளிகள் மீறி கொண்டது. அவநம்பிக்கையாளர்களுக்கு தக்கதான பதிலடி கொடுக்க வேண்டும் என்று அல்லாஹ்வின் தூதர் எண்ணினார். பின்னர் மெக்கா வெற்றி. அல்லாஹ் தனது சரணாலயத்தை அமைதியுடையதாகவும், பாதுகாப்பினையுடையதாகவும், மதத்தினுடைய எல்லையாகவும் அறிவித்தான். நிர்வாணமான மற்றும் அருவருப்பானச் செயல்பாடுகளை நிக்கி அவற்றை சுத்திகரிப்பதற்கான நேரம் வந்து விட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதிகபட்ச எண்களை கொண்ட சேனையின் தலைவராக மாறினார். (மெக்ககாவின் வெற்றிக்கு முன்னர் இஸ்லாமிய வரலாற்றில் இவ்வளவிற்கு மக்கள் பலம் முஸ்லீம்களுக்கிடையே இருந்ததில்லை). மூ.ஃ.மின்களின் திட நம்பிக்கை அல்லாஹ்வின் விருப்பப்படி உறுதியாக பரிணமித்தது. ஒரு துள்ளி இரத்தம் கூட சிதறாமல் மெக்காவை கைப்பற்றி கொண்டனர். ரமலான் 20 – ம் தேதி இது நிகழ்ந்தது. இஸ்லாமிய வரலாற்றில் இது முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் மெக்கா வெற்றிக்கு பின்புதான் துணைதீவுகளில் இஸ்லாம் உறுதியாக நிலைத்து நின்றது. அதே மாதம் தான் பெரிய சிலைகளாகிய லாத்து, மனாத், சுவா மற்றும் இதர சிலைகள் அழிக்கப்பட்டன. இவையெல்லாம் ரமலான் மாதத்தில் தான் நடந்தது.

நமது அன்புகுரிய நபி (ஸல்) அவர்கள் ஏராளம் துன்பங்களை எதிர்கொண்டார். ரமலான் மாதத்தில் பல சோதனைகளை சந்தித்தார். அதே நேரத்தில் அது சுத்திகரிப்பற்கான ஒரு தருணமாக இருந்தது. அதாவது நற்செயல்களை ஊக்கப்படுத்தி தீமையை அழித்துவிடுவதற்கும், தங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக போராடுவதற்கும் ஆன நேரமாகயிருந்தது. இத்தகைய துன்பங்கள் மற்றும்

சோதனைகளை சந்தித்த போதிலும் அவர்கள் அதை கைவிடவல்லை. அவர்கள் நோன்பு நோற்பை கடைபிடித்தனர். இப்பாத்துகளை நிறைவேற்றிட அவர்கள் ஒருவருக்கொருவர் ஊக்குவித்தனர். தீமையை வெறுத்துக் கொண்டனர். இவையாவும் அவர்கள் நல்ல முறையில் கடைப்பிடித்தனர். இதர நற்செயல்களில் ஈடுபட்டுக் கொள்ளவதற்கான நேரத்தையும் அவர்கள் கண்டுகொண்டனர். அல்ஹமதுலில்லாஹ். நபி (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் தோழர்கள் நேர்மையான நம்பிக்கையாளர்களாக இருந்தனர். அவநம்பிக்கையாளர்களின் மிரட்டல்களுக்கு அவர்கள் சற்றும் பயப்படாமல் இருந்தனர். அவர்கள் நம்பிக்கையாளர்களுடன் மிக இரக்கத்துடனும் தாழ்மையுடனும் நடந்தனர். அவர்கள் பசியும் தாகமும் உணராதவாறு பிற நற்செயல்களை ரமலான் மாதத்திலும் இதர மாதங்களிலும் புரிந்து முன்சென்றனர். இத்தகைய தியாகங்கள் வாயிலாகவே அவர்கள் வெற்றியடைந்தனர். இந்த அருளுக்குரிய மாதத்தில் அவர்கள் முயற்ச்சிகளை மேற்கொண்டனர். சோம்பேறித்தனங்களைச் செய்யவில்லை. நேரத்தை செலவழிப்பதற்கான ஒரு வழியாக அவர்கள் தூக்கத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ரமலானை ஒரு சுமையாக அவர்கள் கண்டுக்கொள்ளவில்லை. அவர்கள் அவ்வாறு சிந்தித்ததேயில்லை. மாறாக எல்லா விதமான தியாகங்களை செய்வதற்கும் அவர்கள் ஆயத்தமாகயிருந்தனர். ரமலான் மாதத்தில் அல்லாஹ் அவர்களுக்கு கட்டளையிட்டபடி அவர்கள் நடந்துக் கொண்டனர். பரிபூரணமார்க்கமான இஸ்லாமை அவர்கள் பாதுகாத்தனர். அல்லாஹ்வுக்காக அவர்கள் தங்களின் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். அல்ஹம்துலில்லாஹ்! இத்தகைய தியாகங்கள் வழியாகவே இஸ்லாம் உலகின் நான்கு மூலைகளிலும் பரவியது. உண்மையான இஸ்லாமின் சிறந்த போதனைகளைப் பாதுகாப்பதற்கான கடமை இப்போது நமக்காகும். நாம் ஒருபோதும் பிரிந்து விடக்கூடாது. இந்த பிரிவிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். நாம் அனைவரும் சகோதரர்களாகயிருக்கின்றோம். நாம் ஒன்று சேர வேண்டும். இஸ்லாமிய போதனைகளை பாதுகாப்பதற்காக நாம் செய்த தியாகங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் அத்தகைய தியாகங்கள் செய்ய நாம் முன்வர வேண்டும். எனவே நாம் வேறுபாடுகளை மறந்து விடுவோம். இக்காலகட்டத்தின் கலீ∴பத்துல்லாஹ் என்ற நிலையில் நான்

உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். நமக்கு ஒன்றிணைந்து விடுவோம். நமக்குள் எந்த போராட்டமும் வேண்டாம். நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியான தௌஹீத் மற்றும் நபி வழியினை பாதுக்காத்துக் கொள்ள நமக்கு முயற்சிப்போம். முஸ்லீம்கள் முஸ்லீம்களிடமே போர் செய்து வருகின்றனர். துரதிர்ஷடம்! ஒரு முஸ்லீம் தனது சகோதரனை அம்முஸ்லீம் என அழைக்கின்றனர். தனது சகோதரர்களின் நம்பிக்கையை மதிப்பதில்லை. அல்லாஹ் கட்டளை விடுத்தது போன்றே இஸ்லாமிய மதபோதனைகளுக்கு கட்டுபட்டு செயல்படுவதற்கான சுதந்திரத்தை சட்டங்கள் மூலம் தடுத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். இஸ்லாமை சார்ந்த பல பிரிவினர்கள் – சுன்னி, ஷியா மற்றும் அஹ்மதி போன்றவை – கலீமா (லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்) கூறும் ஒருவரை முஸ்லீம் அல்ல என்று கூறுவதற்கும் அவரை காபிர் என்று விதிப்பதற்கும் இறைவன் அனுமதித்திருக்கின்றானா?

பாகிஸ்தான் நாட்டின் பாக் என்ற ஆரம்பச் சொல் ஆன்மீக தூய்மையை குறிப்பிடுகின்றது. துரதிஷ்ட வசமாக அங்குள்ள தலைவர்கள் தூய்மையாக செயல்படுவதில்லை. மக்களின் நம்பிக்கை சுதந்திரத்தையும் மதசகிப்புத் தன்மையையும் மேம்படுத்தும் வகையில் அவர்கள் நடந்துக் கொள்வதில்லை. திருக் குர் - ஆன் போதனைகளும் திரு நபி அவர்களின் பாடங்களும் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்வதற்க்கு எவரையும் கட்டாயப்படுத்தும் வகையில் அமையவில்லை. ஆனால் அஹ்மதிகளின் காரியத்தில் முஸ்லீம்கள் தங்களின் சகோதரர்களை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்றவாறு வாழ்ந்து கொள்வதற்கு அனுமதிப்பதில்லை என்பது துரதிர்ஷடமாகும். பாக்கிஸ்தான் அஹ்மதிகளை தூஷண சட்டத்தின் (இறை நிந்தனை) கீழ் கைது செய்து சிறைசாலையில் போடுகின்றனர். கருத்து சுதந்திரத்தை ஆதரிப்பவர்களை அவர்கள் கொலை செய்ய முன் வருகின்றனர். அவர்கள் மேற்கொண்டு வருகின்ற இத்தகைய காரியங்கள் முற்றிலும் பயரங்கமாகும்.

நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். இஸ்லாமின் பெயரில் நீங்கள் மேற்கொண்டு வரும் இஸ்லாமிற்கு எதிரான செய்கையை

தவிர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் தனது தீர்மானத்தை செய்யட்டும். சில நபர்களும், சில அமைப்புகளும் உண்மையில் முஸ்லீம்கள் தானா என்ற காரியத்தில் உங்களுக்கு சந்தேகம் இருக்கின்றதா? ஏன் நீங்கள் உங்களின் கைகள் மற்றும் மனசாட்சயினை அசுத்தப்படுத்திக் கொள்கின்றீர்கள். அல்லாஹ் தன் செயல்களை செய்யட்டும். அவன் சிறந்த நீதிபதியாகயிருக்கின்றான். யார் உண்மையான முஸ்லீம் என்பதை அவன் நன்கு அறிந்தவனாகயிருக்கின்றான். தன் மீதும் மற்றும் இஸ்லாம் மீதும் நேர்மையான அன்பை வைத்திருப்பவர் எவர் என்பதை அவன் நன்கறிகின்றான்.

இஸ்லாம் மதத்தைச் சார்ந்திருப்பதிலிருந்து அஹ்மதிகளைத் தடுக்க மதத்திற்கப்பாற்பட்ட பௌதீக வழிமுறைகளை நீங்கள் பயன்படுத்துவது துரதிர்ஷடமாகும். ஆம் இஸ்லாம் மதத்தின் மீது தான் அஹமதிகளும் நம்பிக்கை கொள்கின்றனர் என உறுதியாக நான் குறிப்பிடுகின்றேன். அஹ்மதிகளுக்கு ஒரேஒரு கடவுள் தான் இருக்கின்றான். அது அல்லாஹ் தான். நமது நபி, உண்மையில் முஹம்மது (ஸல்) அவர்கள் தான். நமது புனித புத்தகம் உண்மையில் திரு குர் - ஆன் தான். நமது கலீமா லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது ரசூலல்லாஹ் தான். எங்கள் இதயத்திற்குள் இருக்கும் நம்பிக்கையை எவராலும் அழிக்க முடியாது? அல்லாஹ் நமது பாதுகாவலனாகயிருக்கும் போது இவ்வாறு செய்வதற்கு எவருக்கு முடியும்? அல்லாஹ் தனது ஊழியர்களை நன்கறிந்தவனாகயிருக்கின்றான். இறைவனின் உண்மையான ஊழியர்கள் உலகில் காணப்படும் பல்வேறு பிரிவுகளின் மீது தடுமாற்றமடைந்தவர்களாக சிதறடிக்கப்பட்டுக் காணப்படுகின்றார்கள். அவர்களை மீண்டும் இஸ்லாம் மார்க்கத்தின் பாதையில் திரும்பக் கொண்டு வர இறைவன் நாடுகின்றான். அதன் நேரம் நெருங்கிவிட்டது.

வரலாறு மீண்டும் திரும்புகின்றது. ஆனால் நமது பரிசுத்த தூதர் (ஸல்) அவர்கள் முழுமை பெற்றிருந்தது போன்றல்ல நான். என்றிருந்தும் அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்திருக்கின்றான்; ஒரு சிறு முஹம்மதாக மாறிடுவதற்கும் அன்னாரின் காலடிகளை பின் தொடர்ந்து செல்வதற்கும்! மனிதகுலத்தையும் மற்றும் இஸ்லாமையும் சீர்திருத்துவதற்காக நான் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் தோன்றிருக்கின்றேன். நான்

சீர்திருத்தவாளரான தூதனாவேன். என் தலைவராகிய முஹம்மது (ஸல்) அவர்களின் கணுக்காலின் உயரத்தைக் கூட எட்ட ஒருபோதும் எனக்காகாது. நான் ஒரு ஆதாம் என்றும், தாவூத் என்றும், அல்லாஹ் தனது வெளிப்பாடுகள் மூலம் தெரிவித்திருக்கின்றான். இதன் பொருள் எனது பதவி நபி (ஸல்) அவர்களை விட மேலானதோ அதற்க்கு சமமானதோ என்றல்ல. நான் வேறு ஒரு மதத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கவும் இல்லை. சரளமாக கூறினால் இத்தகைய குணங்களையெல்லாம் அதாவது அவனது அனைத்து தூதர்களின் சிறப்பம்சங்களையெல்லாம் அல்லாஹ் என் வாயிலாக பிரதிபலிக்கவைக்கின்றான். நூறு சதவீதம் இல்லாமல் இருந்தாலும் எனக்கு அளித்திருக்கும் வேலைகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவதற்கே அவன் இவ்வாறு செய்திருக்கின்றான்.

இஸ்லாம் மத நம்பிக்கையை கடைபிடித்து வாழ்வதிலிருந்தும் தங்களின் கருத்துகளை வெளிபடுத்துவதிலிருந்தும் முஸ்லீம் சகோதரர்களை தடுக்க முஸ்லீம்கள்தான் நாட்டின் சட்ட அமைப்பை பயன்படுத்துகின்றார்கள் என்பது துரதிர்ஷ்டமாகும். நாசிர் அஹமது சுல்த்தானி என்னை ஒரு பொய்யன் என்று கூறியிருந்தார். அவர் உண்மையாளர் என்றும் சுயம் தெரிவித்திருந்தார். என்றிருந்தாலும் ஒரு வருடமாக அவர் பாகிஸ்தான் சிறையில் இருக்கின்றார். 2017 மார்ச்சுக்கு பிறகு அவரை பற்றிய எந்த தகவல்களும் இல்லை. கலீ∴பத்துல்லாஹ் என்ற நிலையில் அவரை விடுதலை செய்ய பாகிஸ்தான் அதிகாரிகளுடன் நான் வேண்டிக்கொள்கின்றேன். கவனித்துக் கொள்ளுங்கள், அவரின் நம்பிக்கையைப் பற்றி தீர்ப்புக் கூற வேண்டியது நீங்கள் அல்ல. அது அல்லாஹ்வின் வேலையாகும். இறை கட்டளைகளைப் பெறாமல் இறைவனிடமிருந்து வந்திருக்கின்றேன் என உரிமை கோருவதற்கு இறை நாமத்தை தவறாக பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொய்யர்களின் காரியத்தில் தீர்ப்பு கூறுபவன் இறைவன் தான்.

நீதியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை நீங்கள் உணராத நிலையில் நீதி செய்ய உங்கள் கரங்களை நீட்டிக்கொள்ளாதீர்கள். திறந்த மனதுடன் நீ தீர்ப்புக் கூற வேண்டும். தொடர்புப்பட்ட சாட்சிதாரர்களை அதாவது புகார் அளித்தவரையும் புகாருக்குரியவரையும்

நீ நன்கு விசாரிக்க வேண்டும். அதோடு நீதி தவறாது, ஒரு புறம் சாயாது, செங்கோல் முறையில் நீ தீர்ப்புக் கூற வேண்டும். இதை மிக அழகான முறையில் செய்பவன் இறைவனாவான். நம்பிக்கையின் பெயரில் மக்களை அழிக்க ஏன் நீங்கள் அவசரப்படுகின்றீர்கள்? உங்களைப் போன்ற முஸ்லீம்களை கொல்ல நீங்கள் இறைவனிடமிருந்து வெளிப்பாடுகள் மூலம் அனுமதியை பெற்று விட்டீர்களோ? மேலும் நான் கூறுகின்றேன். அவனது படைப்பினங்களோடு தொடர்புடைய காரியங்களைப் பற்றிய தீர்ப்பினை கூற இறைவனை நீங்கள் அனுமதியுங்கள். யார் உண்மையானவர், யார் பொய்யானவர் என்பதை அவன் நன்கு அறிந்தவனாகயிருக்கின்றான். உண்மை நிச்சயமாக வெல்ல வேண்டும். இன்ஷா அல்லாஹ்!

**“அவர்களும் திட்டம் தீட்டினார். அல்லாஹ்வும் திட்டம் தீட்டினான். திட்டம் தீட்டுபவர்களுள் அல்லாஹ் மிக சிறந்தவன்”** (3.55)

நமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் நம்பிக்கையை குறித்து ஆராய்ந்துக் கொள்வதை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. ஏனெனில், இது, நாம் நம்முடைய நம்பிக்கையை சோதித்தறிகின்ற தருணம் ஆகும். எனவே நீங்கள் உங்களின் சொந்த நம்பிக்கையினை சோதித்துப் பாருங்கள். நிச்சயமாக ரமலான் மாதம் அதற்கு முற்றிலும் நல்ல வாய்ப்பாகயிருக்கிறது. இஸ்லாத்தை ஒற்றுமையுடையதாகவும் வலிமை வாய்ந்ததாகவும் தளைத்து ஓங்க செய்வதற்கும் எல்லாம் வல்ல இறைவன் நமக்கு மிகுந்த ஆற்றலினையும் நல்ல வெற்றியினையும் அளித்து அருள் செய்வதற்குமாக நாம் நமது சகோதரர்களுக்கிடையேயான மதம் சார்ந்த வெறுப்பு உணர்வுகளை இந்த ரமலானில் நமக்கு களைந்து விடுவோம். அதற்காக இந்த அருளுக்குரிய மாதத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்தனை செய்வோம்.

இஸ்லாமின் பெருமையை உயர்த்தி காட்டுபவராக இருக்க நமக்கு அல்லாஹ் வழிவகுக்கட்டும். திருக் குர் - ஆனின் 700 இறை கட்டளைகளுக்கும் மதிப்பை மற்றும் மரியாதையினையும் அளிப்பவர்களாக நாம் மாறி விடட்டும். புனித புத்தகத்தின்

போதனைகளுக்கு கட்டுபட்டு வாழுகின்ற உண்மையான நம்பிக்கையாளர்களாக நாம் பரிணமிக்கட்டும். ஆமீன். இந்த அருள் நிறைந்த மாதத்தில் நமது அன்புகுரிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும், அன்னாரின் தோழர்கள் மீதும், அன்னாரின் பௌதீக மற்றும் ஆன்மீக பரம்பரைகள் மீதும், நீ அருட்கொடைகளை பொழிந்துக் கொண்டிருப்பாயாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** **jamal.raother@gmail.com**
**Phone:** 9447001832, 04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in